தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

**20.08.2013**

**தமிழகத்தில்இன்று மழை பெய்ய வாய்ப்பு**

தமிழகம், புதுவையில் செவ்வாய்க்கிழமை மழையோ இடியுடன் கூடிய மழையோ பெய்ய வாய்ப்புள்ளது என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

திங்கள்கிழமை காலை நிலவரப்படி திருபுவனத்தில் 60 மி.மீ. மழை பதிவாகியுள்ளது.

வங்கக் கடலில் காற்றழுத்தத் தாழ்வு நிலை: வங்கக் கடலின் வடமேற்குப் பகுதியை ஒட்டிய மேற்கு வங்கம் மற்றும் ஒடிசா மாநிலங்களுக்கு இடையில் காற்றழுத்தத் தாழ்வு நிலை உருவாகியுள்ளது. இது காற்றழுத்தத் தாழ்வு மண்டலமாக வலுப்பெற வாய்ப்புள்ளது என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது

**காய்கறிகள் உற்பத்தியைப் பெருக்க விவசாயிகளுக்கு 40% மானியத்துடன் கடன்**

தமிழகத்தில் காய்கறிகள் உற்பத்தியைப் பெருக்கும் நோக்கில், 40 சதவீத மானியத்துடன் வழங்கப்படும் கடனை விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று தமிழக அரசின் வேளாண்மைத்துறை செயலாளர் சந்தீப் சக்சேனா தெரிவித்துள்ளார்.

திருவண்ணாமலை மாவட்டத்தில் வேளாண்மை மற்றும் தோட்டக்கலைத் துறைகள் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் பயிர் சாகுபடிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் சனிக்கிழமை நடைபெற்றது. மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற இக் கூட்டத்துக்கு, ஆட்சியர் அ.ஞானசேகரன் தலைமை வகித்தார்.

தமிழக அரசின் வேளாண்துறை முதன்மைச் செயலாளர் சந்தீப் சக்சேனா, தோட்டக்கலைத் துறை ஆணையர் சத்யபிரத சாஹூ ஆகியோர் மாவட்டத்தைச்

சேர்ந்த வேளாண் மற்றும் தோட்டக்கலைத் துறை அலுவலர்களுடன் ஆய்வு நடத்தி, ஆலோசனைகள் வழங்கினர்.

கூட்டத்தில் வேளாண்மைத் துறை செயலாளர் சந்தீப் சக்சேனா பேசியது:

காய்கறிகள், கீரைகள், பழங்கள் மொத்த விற்பனையில் விவசாயிகளை நேரடியாக ஊக்குவிக்க தமிழக அரசு புதிய திட்டத்தை அறிவித்துள்ளது. இத் திட்டத்தின் கீழ் சென்னை புறநகர் காய்கறி உற்பத்தித் திட்டத்தில் விவசாயிகள் நேரடியாகவே காய்கறி விற்பனை செய்யலாம்.

காய்கறி விற்பனையை எளிதாக்க விவசாயிகள் அடங்கிய குழுக்கள் அமைக்கப்படுகின்றன. இக் குழுக்கள் மூலம் காய்கறிகள் மொத்தமாக சேகரிக்கப்பட்டு குழுத் தலைவர் அல்லது செயலாளர் மூலம் காய்கறிகள் விற்பனை செய்யப்படும்.

40 சதவீத மானியத்தில் கடன்:சென்னைக்குத் தேவையான காய்கறிகளை உற்பத்தி செய்ய திருவண்ணாமலை, வேலூர், காஞ்சிபுரம், திருவள்ளூர், விழுப்புரம் மாவட்ட விவசாயிகளுக்கு 40 சதவீத மானியத்துடன் கூடிய கடன் வழங்கப்படுகிறது. சொட்டுநீர்ப் பாசனம் மூலமும் காய்கறிகளை உற்பத்தி செய்யலாம். காய்கறிகளை உற்பத்தி செய்யவும், உற்பத்தி செய்த காய்கறிகளை சேகரிப்பு மையத்துக்குக் கொண்டு செல்லவும் தேவையான சரக்கு வாகனம் வாங்கவும் இந்தக் கடன் பயன்படும்.

இத் திட்டங்கள் குறித்து வேளாண் துறை அதிகாரிகள் விவசாயிகளுக்கு எடுத்துச் சொல்லி விளக்க வேண்டும் என்றார் சந்தீப் சக்சேனா.

கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் ச.வளர்மதி, வேளாண்மைத்துறை இணை இயக்குநர் பன்னீர்செல்வம், தோட்டக்கலைத் துறை இணை இயக்குநர் ஜெகநாதன், ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) சந்திரசேகரன், தோட்டக்கலைத் துறை அலுவலர் ஜெயச்சந்திரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**டாலர் மதிப்பு உயர்ந்தும் முட்டை ஏற்றுமதியாளர்களுக்கு பலனில்லை**

வரலாறு காணாத அளவில் அமெரிக்க டாலரின் மதிப்பு உயர்ந்த போதிலும், அதன் பலனை அனுபவிக்க முடியாத நிலை நாமக்கல் மண்டல முட்டை ஏற்றுமதியாளர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

இதற்கு ஓமன் உள்ளிட்ட வளைகுடா நாடுகளில் இந்திய முட்டை இறக்குமதிக்கு விதிக்கப்பட்ட தடை முழுமையாக விலக்கிக் கொள்ளப்படாததே காரணம் என்று கோழிப் பண்ணையாளர்கள் தெரிவித்தனர்.

மத்திய அரசு நடப்புக் கணக்கு பற்றாக்குறை, ஏற்றுமதியைக் காட்டிலும் இறக்குமதி அதிகரிப்பு உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு ரூ.63.13 என்ற நிலையில் சரிவடைந்தது.

இவ்வாறாக, அமெரிக்க டாலரின் மதிப்பு உயர்ந்துள்ளது இந்திய ஏற்றுமதியாளர்களுக்கு இது நல்ல தருணமாகும். இருப்பினும், பறவைக் காய்ச்சல் பாதிப்பு காரணமாக, இந்திய முட்டை ஏற்றுமதிக்கு ஏற்பட்டுள்ள தடை, டாலர் மதிப்பு உயர்வின் பலனை நாமக்கல் மண்டல முட்டை ஏற்றுமதியாளர்கள் அனுபவிக்க முடியாமல் செய்துள்ளது.

தேசிய அளவில் கோழி முட்டை உற்பத்தியில் தனிச் சிறப்பு பெற்றுள்ள நாமக்கல் மண்டலத்திலிருந்து 2007-2008ஆம் ஆண்டில் பக்ரைன், ஓமன், குவைத், கத்தார் உள்ளிட்ட 11 வளைகுடா நாடுகளுக்கும், ஆஃப்கானிஸ்தான், ஆப்பிரிக்க நாடுகளுக்கும் மாதந்தோறும் 10 கோடி முதல் 12 கோடி முட்டைகள் ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தன.

இந்த ஏற்றுமதி வாய்ப்பு 2008-ஆம் ஆண்டு இறுதியிலிருந்து சரியத் தொடங்கியது. இதற்கு வட மாநிலங்களில் ஏற்பட்ட பறவைக் காய்ச்சல் பாதிப்பே முக்கியக் காரணம். பக்ரைன், ஓமன் தவிர மற்ற 9 வளைகுடா நாடுகளிலும் இந்திய முட்டைகளுக்கு தடை விதிக்கப்பட்டு நாமக்கல் மண்டல முட்டை ஏற்றுமதி 80 சதம் சரிவடைந்தது.

நாமக்கல் மண்டல முட்டைகளுக்கு முக்கியச் சந்தையாக விளங்கும் ஓமன் நாட்டில் 2012, மார்ச் முதல் தடை விதிக்கப்பட்டுள்ளது. இதனால், கடந்த ஜூன் மாதத்தில்

ஏற்றுமதி 42.51 லட்சம் முட்டைகளாகக் குறைந்தது.

தற்போது பண்ணையாளர்களின் கோரிக்கையை ஏற்று, ஓமன் நாட்டு வல்லுநர்கள் குழு நாமக்கல்லிலுள்ள சில பண்ணைகளில் மேற்கொண்ட ஆய்வை அடுத்து, இரு பண்ணையாளர்களுக்கு முட்டை ஏற்றுமதி செய்ய அனுமதி கிடைத்துள்ளது. இதனால், முட்டை ஏற்றுமதி ஜூலை மாதம் 1.41 கோடியாக உயர்ந்த போதிலும், இழந்த ஏற்றுமதி வாய்ப்புகளை ஈடுசெய்ய முடியவில்லை. தற்போது, டாலர் மதிப்பு உயர்ந்த போதிலும், அதன் முழுப் பலனை முட்டை ஏற்றுமதியாளர்கள் பெற முடியவில்லை என்கிறார் நாமக்கல் முட்டை ஏற்றுமதியாளர் பி.வி.செந்தில்.

இதுகுறித்து மற்றொரு ஏற்றுமதியாளர் கூறியது:

2007-2008ஆம் நிதியாண்டு அடிப்படையில் முட்டை ஏற்றுமதி நடந்திருந்தால் தற்போதைய டாலர் மதிப்பு உயர்வுக்கு பெருமளவில் அன்னியச் செலாவணியை ஈட்டியிருக்க முடியும்.

வட மாநிலங்களில் ஏற்பட்ட பறவைக் காய்ச்சல் பாதிப்பே முட்டை ஏற்றுமதியைப் பாதித்துள்ளது.

90 நாள்களுக்கு மேலாக ஒரு நாட்டில் நோய்த் தொற்று இல்லாதபட்சத்தில் சுகாதார நிறுவனம் உறுதியளித்தால், அந்த நாட்டிலிருந்து முட்டை உள்ளிட்ட உணவுப் பொருள்களை இறக்குமதி செய்யலாம் என்பது சர்வதேச விதியாகும். அதன்படி, 9 வளைகுடா நாடுகளிலும் இந்திய முட்டைகளுக்கான தடையை விலக்கிடவும், புதிய நாடுகளில் முட்டை ஏற்றுமதி வாய்ப்பை விரிவுபடுத்தவும் மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார் அவர்.

**ராசிபுரத்தில் விவசாயத் தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம்**

பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி, அகில இந்தியா விவசாயிகள் சங்கத்தினர் ராசிபுரத்தில் திங்கள்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ராசிபுரம் வட்டாட்சியர் அலுவலகம் முன் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தின் போது, உணவுப் பாதுகாப்பை அனைவருக்கும் உறுதி செய்ய வேண்டும். கோயில், மடம் மற்றும் அரசு புறம்போக்கு நிலங்களில் குடியிருந்து வரும் தாழ்த்தப்பட்ட

ஏழை மக்களுக்கு அந்த நிலங்களை உரிமையாக்கி பட்டா வழங்க வேண்டும். தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் அளவு முறையை கைவிட்டு விட்டு, கூலி உத்தரவாதம் அளிக்க வேண்டும்.

மேலும், அதில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு காலம் தாழ்த்தாமல் ஊதியம் வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி கோஷம் எழுப்பப்பட்டது.

முன்னதாக ராசிபுரம் பழைய பேருந்து நிலையத்திலிருந்து தொழிலாளர்கள் ஊர்வலமாகப் புறப்பட்டு முக்கிய வீதிகள் வழியாக வந்தனர்.

ஆர்ப்பாட்டத்துக்கு நாமக்கல் மாவட்ட அமைப்பாளர் கணேசன் தலைமை வகித்தார். எம்.ஜி.ஆர். காலனி நிர்வாகிகள் யசோதா, சுசீலா, சங்கீதா, முத்துலட்சுமி ஆகியோர் முன்னிலை வகித்தனர். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி லெனிஸ்ட் பிரிவு மாவட்டச் செயலாளர் மோகனசுந்தரம், கிஷான் சங்க மாவட்டச் செயலாளர் அய்யந்துரை உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**கரும்பு விளைச்சல் பாதிப்பு: வெல்லம் உற்பத்தி குறைந்தது**

பருவமழை பொய்த்து வறட்சி ஏற்பட்டதால் தாராபுரம் பகுதியில் கரும்பு விளைச்சல் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக வெல்லம் உற்பத்தி குறைந்துள்ளது.

தாராபுரம் பழைய மற்றும் புதிய அமராவதி பாசனத்தில் கடந்த ஆண்டு 20 ஆயிரம் ஏக்கரில் கரும்பு சாகுபடி செய்யப்பட்டிருந்தது. இந்த ஆண்டு பருவமழை பொய்த்து வறட்சி ஏற்பட்டதால் வெறும் 5 ஆயிரம் ஏக்கரில் மட்டுமே கரும்பு பயிர் செய்யப்பட்டது. அதிலும், பெரும்பாலானவை கருகிப்போனதால் மீதமுள்ள கரும்பை அமராவதி மற்றும் தனியார் சர்க்கரை ஆலைகளுக்கு விவசாயிகள் அனுப்பி விட்டனர்.

ஒரு ஏக்கருக்கு ரூ.30 ஆயிரம் வரை செலவு செய்த விவசாயிகளுக்கு ரூ.15 ஆயிரம் மட்டுமே கிடைத்தது. இந் நிலையில், கரும்புப் பாலில் இருந்து வெல்லம் தயாரிப்பதில் பிரசித்தி பெற்ற அலங்கியம் பகுதியில் இந்தாண்டு வெல்ல உற்பத்தி வெகுவாக குறைந்து விட்டது. ஓரளவு தண்ணீர் வசதியுள்ள விவசாயிகள்

ஆலைகள் அமைத்து வெல்ல உற்பத்தியில் ஈடுபட்டுள்ளனர். கரும்பின் தரம் குறைந்ததால் வெல்லத்தின் தரத்திலும் குறைபாடு காணப்படுகிறது. இதனால், கடந்த ஆண்டு 30 கிலோ கொண்ட சிப்பம் ரூ.1,000-க்கு விற்ற நிலையில் தற்போது ரூ.750-க்கே விலை போகிறது.

அலங்கியம் ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தில் இந்த ஆண்டு உற்பத்தி குறைந்ததால் ஏலம் நடத்த ஏற்பாடுகள் நடைபெறவில்லை. தனியார் மார்க்கெட்டிற்கு வெல்லத்தைக் கொண்டு சென்றால் தரகு, கமிஷன், சுங்கம் என விவசாயிகளுக்கு கூடுதல் சுமை ஏற்படுகிறது. இதனால், ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தில் ஏலம் நடத்த வேண்டுமென விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**பவானிசாகர் நீர்மட்டம்**

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் திங்கள்கிழமை 85.26 அடியாக இருந்தது.
அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 1,100 கன அடி நீர் வந்துகொண்டிருந்தது. அணையில் இருந்து ஆற்றில் 1,544 கன அடி நீர் திறந்துவிடப்பட்டது. வாய்க்காலில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர் இருப்பு 18.63 டி.எம்.சி.

**கோபியில் ரூ.8 லட்சத்திற்கு வாழைத்தார் ஏலம்**

கோபி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தில் சனிக்கிழமை நடைபெற்ற ஏலத்தில் ரூ.8 லட்சத்துக்கு வாழைத் தார் விற்பனை நடைபெற்றது.
அதன் விவரம் வருமாறு: கதளி கிலோ ரூ.46 க்கும், நேந்திரன் கிலோ ரூ.47 க்கும், செவ்வாழை தார் ரூ.760 க்கும், தேன் வாழை தார் ரூ.1,120 க்கும், பூவன் தார் ரூ.550 க்கும், ரஸ்தாளி தார் ரூ.425 க்கும், ரொபஸ்டோ தார் ரூ.380 க்கும், மொந்தன் தார் ரூ.300 க்கும், பச்சைநாடன் தார் ரூ.250 க்கும் அதிகபட்சமாக விலை போனது. மொத்தம் 5 ஆயிரம் வாழைத்தார்கள் ரூ.8 லட்சத்திற்கு விற்பனை

செய்யப்பட்டது.

பழனி தேவஸ்தான அதிகாரிகள் ஏலத்தில் கலந்து கொண்டு நேரடியாக தேன் வாழைத்தார்களைக் கொள்முதல் செய்தனர். இதனால், கோபியில் முன்னெப்போதும் இல்லாத வகையில் தேன் வாழைத்தார் ஒன்று அதிகபட்சமாக ரூ.1,120 க்கு விற்பனையானது.

பழனி தேவஸ்தான அதிகாரிகள் மொத்தம் 365 தார்களை வாங்கிச் சென்றனர்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**20.08.2013**

## உரமூடையில் குறிப்பிடப்பட்ட விலை கொடுத்தால் போதும்

தேனி : விவசாயிகள் உரங்கள் வாங்கும் போது, மூடையில் குறிப்பிடப்பட்டுள்ள விலையை கொடுத்தால் போதும், அதிக பணம் கேட்டால் உடனடியாக புகார் செய்ய வேண்டும், என விவசாயத்துறை தெரிவித்துள்ளது.

விவசாயிகளுக்கு தேவையான உரங்கள் தொடக்க விவசாய கூட்டுறவு சங்கங்களிலும், தனியார் உரக்கடைகளிலும் உள்ளன. ஒரே ரக உரத்திற்கு ஒவ்வொரு கம்பெனியும் ஒவ்வொரு விலை நிர்ணயம் செய்துள்ளன. இதனால் விவசாயிகளுக்கு உர விலையில் குழப்பம் ஏற்படும்.

இந்த குழப்பத்தை பயன்படுத்தி, வியாபாரிகள் உரங்களை அதிக விலைக்கு விற்பனை செய்கின்றனர். எனவே விவசாயிகள் உரம் வாங்கும் போது உர மூடையில் எவ்வளவு விலை அச்சிடப்பட்டுள்ளதோ, அதனை மட்டும் கொடுத்தால் போதும்.உரம் வாங்கும் போது கட்டாயம் பில் வாங்க வேண்டும். கூடுதல் விலை கேட்டால் விவசாயத்துறை அதிகாரிகளிடம் புகார் செய்யலாம்,என அறிவிக்கப்பட்டுள்ளது.

## விதை சான்று அலுவலருக்கு செயல் விளக்க பயிற்சி

கோபிசெட்டிபாளையம்: பவானிசாகர் வேளாண்மை ஆராய்ச்சி நிலைய விதைப் பண்ணையில் பயிரிடப்பட்டுள்ள, அதிக மகசூல் தரும் உளுந்து, துவரை விதை உற்பத்தி திறன் குறித்து, விதை சான்று அலுவலர்களுக்கு, நேரில் செயல் விளக்க பயிற்சி அளிக்கப்பட்டது.

கோபி வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், விதைச்சான்று துறை சார்பில், அலுவலர்களுக்கு புத்தாக்க பயிற்சி முகாம் நடந்தது.

விதைச் சான்று இணை இயக்குனர் கோவிந்தராஜ் தலைமை வகித்தார். வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தலைவர் காளியப்பன் முன்னிலை வகித்தார். ஈரோடு விதைச் சான்று உதவி இயக்குனர் மகாதேவன் தலைமையில், பவானிசாகர் வேளாண் ஆராய்ச்சி நிலையத்தில் உள்ள பல்வேறு விதைப் பண்ணைகளை, விதைச் சான்று அலுவலர்கள் பார்வையிட்டனர். தரமான விதை உற்பத்தி, விதை சுத்தகரிப்பு, அதிக முளைப்பு திறன் விதைகளை உற்பத்தி செய்தல், அங்கக விதை உற்பத்தி மகசூல் கணக்கீடு செய்தல், விதைப் பாலிமர் கோட்டிங் செயல் விளக்கம் அளிக்கப்பட்டது.

விதைச் சான்று துணை இயக்குனர் பழனிகுமார், விதை ஆய்வு துணை இயக்குனர் அண்ணாத்துரை, விதைச்சான்று உதவி இயக்குனர் மகாதேவன், விதை சான்று அலுவலர்கள் சுந்தரமூர்த்தி, கோவிந்தசாமி, மோகனசுந்தரம், மாரிமுத்து, பேராசிரியர் சுந்தரேஸ்வரன் உட்பட பலர் பங்கேற்றனர்.

## நெல் விவசாயம் குறைந்து வருவதால் இழப்பு

பந்தலூர்:"நீலகிரி மாவட்டத்தில் குறைந்து வரும் நெல் விவசாயத்தை காப்பாற்ற அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்' என, வலியுறுத்தப்பட்டுள்ளது.கேரள மாநிலம் வயநாடு மாவட்டத்தை ஒட்டி, நீலகிரி மாவட்டம் கூடலூர், பந்தலூர் அமைந்துள்ளன. இங்குள்ள காலநிலையில், தேயிலை, காபி விவசாயம் மட்டுமின்றி வயல்பகுதியில் நெல் விவசாயமும் களைகட்டி காணப்பட்டது. ஆண்டு முழுவதும் நெல் விவசாயம் மேற்கொள்வதில் வயநாடன் செட்டி, பழங்குடியின சமுதாயத்தினர் அதிக ஆர்வம் காட்டி வந்தனர். தொண்டி, சேற்றுவெளியன், சீரகசாலா, சன்னா உள்ளிட்ட 17வகையான நெல் விவசாயம் செய்யப்பட்டது. ஆனால், காலமாற்றத்தின் காரணமாக, போதிய மழையின்மை, நெல் நடவு பணிக்கு ஆட்கள் பற்றாக்குறை, உரம் விலை உயர்வு உள்ளிட்ட காரணங்களால், நெல் விவசாயம் படிப்படியாக மாற்றம் பெற்று வயல்பகுதிகள் தேயிலை தோட்டங்களாகவும், நேந்திரன் வாழை தோட்டங்களாகவும் மாற்றம் பெற்று வருகின்றன.

கேரளா மாநிலத்தில் நெல் விவசாயத்தை ஊக்குவிக்கும் வகையில், பழமையான நெல் வகைகள் பயிரிட ஒரு ஏக்கருக்கு 20 ஆயிரம் ரூபாயும், புதிய வகை நெல் நடவு செய்ய ஏக்கருக்கு 5000 ரூபாயும் மானியமாக அரசு வழங்கி வருகிறது. இதனால், கேரளா மாநிலத்தில் நெல் விவசாயத்தில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். ஆனால், தமிழக அரசு இதுபோன்ற நடவடிக்கை எடுக்காத நிலையில், கூடலூர், பந்தலூர் நெல் விவசாயம் படிப்படியாக அழிவின் விழிம்பிற்கு சென்று வருகிறது. எனினும், பந்தலூர் பகுதியில் எருமாடு சுற்றுவட்டார பகுதி பழங்குடியின மக்கள் பழமைமாறாத வகையில், தற்போதும் குறைந்த பரப்பில் நெல் விவசாயத்தில் ஈடுபட்டுள்ளனர். இப்பகுதியில், தற்போது ஆதிரா, குட்டிவெளியன், ஐ.ஆர்.20, 8 ஆகிய வகை நெல் பயிரிடப்படுகிறது.இப்பகுதியை சேர்ந்த நீலகண்டன் என்பவர் கூறுகையில்,""இப்பகுதியில் விவசாயம் செய்யப்பட்ட நெல் ஒரு காலத்தில் ஏற்றுமதி செய்யப்பட்டது. ஆனால், மாநில அரசு விவசாயிகளின் நிலை குறித்து கண்டுக்கொள்ளாத நிலையில், நெல் விவசாயம் அழிவை நோக்கி செல்கிறது. விவசாயிகள் இழப்பை சந்திக்க வேண்டிய சிக்கல் ஏற்படுகிறது. இதனை தவிர்க்க, மானியம் வழங்க அரசு முன் வர வேண்டும்," என்றார்.

## மழை பொய்த்ததால் 13 சதவீதம்பசுந்தேயிலை மகசூல் குறைவு

குன்னூர்:குன்னூரில் பொய்த்து வரும் மழை காரணமாக, கார்போக பணிகளில் ஈடுபட முடியாமல் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.கோடை காலம் முடிவடைந்து சில மாதங்கள் ஆகியும், குன்னூரில் பகல் நேரங்களில் வெயிலின் தாக்கம் அதிகரித்துள்ளது. இந்நிலையில், கடந்த 5 மாதங்களாக போதுமான மழையில்லாததால் தேயிலை மகசூல் குறைந்துள் ளது."பருவ மழை முன் கூட்டியே துவங்கும்' என, எதிர்பார்த்திருந்த நிலையில், இது வரை மழை பெய்வதற்கான அறிகுறிகள் காணப்படவில்லை. சில நாட்கள் மட்டும் மழை பெய்தது. மழை பொய்த்த காரணத்தால், நடப்பாண்டு 13 சதவீத தேயிலை மகசூல் குறைந்துள்ளது.

காய்கறி விவசாயமும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. தண்ணீர் இல்லாமல் நிலங்கள் வறண்டு வருவதால், கார்போக பணிகளில் ஈடுபட முடியாமல் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

## தேயிலை தோட்டங்களில் மகசூல் அதிகம்

பந்தலூர் பகுதியில் தொடர் மழைக்கு நடுவே தலைகாட் டும் வெயிலால் தேயிலை வரத்து அதிகரிக்க வாய்ப்புள்ளது.பந்தலூர், கூடலூர் பகுதிகளில் கடந்த மே மாதம் 28ம்தேதி துவங்கிய தென்மேற்கு பருவமழை தொடர்ந்து பெய்து வருகிறது. பண்டைய கால பருவ மழையை நினைவுபடுத்தும் வகையில் அமைந்த இந்தாண்டு பருவமழை தொடர்ந்ததால் 2 மாதங்களாக சூரிய கதிர்களை காண இயலாத நிலை ஏற்பட்டது. மேலும், தொடர் மழையால் தேயிலை தோட் டங்களிலும் நோய்கள் பரவியது. இந்நிலையில், கடந்த வாரம் ஒரு சில நாட்கள் வெயில் தலைகாட்டியதால் தேயிலை தோட்டங்களில் தற்போது இலை வரத்து அதிகரிக்க துவங்கியுள் ளது. இதனால் தேயிலை விவசாயிகள் மத்தியில் மகிழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

## மரவள்ளி பயிரிடுவதில்விவசாயிகள் ஆர்வம்

மரக்காணம்:மரக்காணம் பகுதியில் மரவள்ளி கிழங்கு பயிர்யிடுவதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.மரக்காணம் ஒன்றியத்தில் நடுக்குப்பம், கந்தாடு, வண்டிப்பாளையம், கோட்டிக்குப்பம், ஓமிப்பேர், தேவிக்குளம், புதுப்பாக்கம் உள்ளிட்ட 25 க்கும் மேற்பட்ட கிராமங்களில் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களில் ஆண்டு பயிராக மரவள்ளி பயிர் செய்யப்படுகிறது. மரக்காணம் பகுதியில் தானே புயல் தாக்குதலால் விவசாயம் பெரிதும் பாதிக்கப்பட்டது. தற்போது அரசின் நிவாரணத்திற்கு பிறகு மரக்காணம் பகுதியில் மாணாவாரி பயிராக விவசாயிகள் மரவள்ளி பயிர் செய்வதில் ஆர்வம் காட்டியுள்ளனர். மழை பெய்ததால் விவசாயிகள் யூரியா போன்ற ரசாயன உரங்களை மரவள்ளி பயிர்களுக்கு போட்டுள்ளனர். கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு மரவள்ளி பயிருக்கு கூடுதல் மகசூல் கிடைக்கும் என்று எதிர்பார்க்கின்றனர்.

## வெங்காயம் விலை எப்போது குறையும்பதில் கூற மறுக்கிறார் சரத் பவார்

புதுடில்லி:வெங்காயம் உற்பத்தியாகும் மாநிலங்களில், மழை காரணமாக, சப்ளை பாதிக்கப்பட்டுள்ளது. எனவே, அதன் விலை எப்போது குறையும் என்று கூற முடியாது என, மத்திய வேளாண் அமைச்சர் சரத் பவார் தெரிவித்தார்.
டில்லியில் அவர் செய்தியாளர்களிடம் மேலும் கூறியதாவது:வெங்காயம் விலை உயர்வு தற்காலிகமானது. வெங்காயம் அதிகம் விளையும் மாநிலங்களில் இருந்து வரத்து அதிகரிக்கத் துவங்கியதும், அதன் விலை குறைந்து விடும். எனக்கு வெங்காயம் விலை பற்றி தெரியாது. ஆனால், வெங்காய பயிரின் நிலை பற்றி தெரியும்.நாசிக்கில், வறட்சி காரணமாக, வெங்காயம் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. அதே சமயம், ஒட்டுமொத்த அளவில், வெங்காய பயிரின் நிலை சிறப்பாக உள்ளது.தமிழ்நாடு, மத்தியபிரதேசம், ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் இருந்து எந்த நேரத்திலும் வெங்காயம் வரத்தாகலாம். ஆனால், மழை காரணமாக, அந்த மாநிலங் களில், சரக்கு போக்குவரத்தில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.வெங்காயம் விலையை கட்டுப்படுத்த, அதன் ஏற்றுமதி விலையை, டன்னுக்கு 650 டாலராக மத்திய அர" நிர்ணயித்துள்ளது. மேலும், "நாபெட்' மூலம் வெங்காயம் இறக்குமதி செய்யவும் அனுமதி அளித்துள்ளது. இவ்வாறு அமைச்சர் கூறினர்.நாடு முழுவதும் வெங்காயத்தின் விலை, கிலோ, 60-80 ரூபாய் என்ற அளவிற்கு உயர்ந்துள்ளது.
வரும் அக்டோபரில் புதிய வெங்காயம் சந்தைகளுக்கு வரத்தாகும் வரை, இந்த விலையேற்றம் நீடிக்கும் என, தெரிகிறது.நடப்பு நிதியாண்டின், ஏப்ரல் முதல் ஜூன் வரையிலான முதல் காலாண்டில், இந்தியா, 776.47 கோடி ரூபாய் மதிப்பிலான, 5,11,616 டன் வெங்காயத்தை ஏற்றுமதி செய்துள்ளது. இது, சென்ற நிதியாண்டின், இதே காலத்தில், 5,17,274 டன்னாக இருந்தது.நடப்பாண்டு, நாடு தழுவிய அளவில், வெங்காயம் பயிரிடும் பரப்பளவு, சென்ற ஆண்டை விட, 10 சதவீதம் குறைந்து, 10.87 லட்சம் ஹெக்டேராக சரிவடைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

## 20.08.2013

### மக்களை கவர புதிய திட்டம் ஒரு கிலோ வெங்காயம் ரூ.25 பா.ஜனதா சார்பில் விற்பனை



புதுடெல்லி: வெங்காயத்தின் கடும் விலை உயர்வால் கடும் அதிருப்தியடைந்துள்ள மக்களை தங்கள் பக்கம் இழுக்கும் நோக்கில், ஒரு கிலோ வெங்காயம் ரூ. 25க்கு விற்க பாரதிய ஜனதா கட்சி ஏற்பாடு செய்துள்ளது.டெல்லியில் வெங்காயம் விலை கிலோ 80க்கு மேல் உயர்ந்துள்ளது. டெல்லி மக்களின் அன்றாட சமையலில் வெங்காயமும் தக்காளியும் முக்கிய இடம் பெற்றுள்ளது. வெங்காய விலை உயர்வால் மக்கள் கடும் அதிருப்தியடைந்துள்ளனர். இதையடுத்து, வேன்கள் மூலம் 1000 இடங்களில் வெங்காயம் கிலோ ஸி50க்கு விற்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. கடந்த 1998ம் ஆண்டு தேர்தலில் வெங்காய விலை உயர்வால் பாரதிய ஜனதா கட்சி ஆட்சியை இழந்தது. இதை இன்னும் பா.ஜ. மறக்கவில்லை. சட்டப்பேரவை தேர்தலுக்கு இன்னும 3 மாதமே உள்ள நிலையில், வெங்காய விலையால் அதிருப்தியடைந்துள்ள மக்களை தங்கள் பக்கம் ஈர்க்கும நோக்கில் ஒரு கிலோ வெங்காயம் ஸி25க்கு விற்க பா.ஜ. நடவடிக்கை எடுத்துள்ளது.

டெல்லி மாநில பா.ஜ. தலைவர் விஜய் கோயல் கூறியதாவது:வெங்காயம்

மட்டுமின்றி எல்லா காய்கறிகளின் விலையும் உயர்ந்துள் ளது. இதை கட்டுப் படுத்த மாநில அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. பதுக்கல் பேர்வழிகள் மீது நடவடிக்கை எடுக்க தவறியதற்காக உணவு அமைச்சர் ஹாருன் யூசுப்பை முதல்வர் டிஸ்மிஸ் செய்ய வேண்டும். வெங்காய விலை உயர்வை கட்டுப்படுத்த தவறிவிட்டு, இப்போது தனது கையாலாகாதனத்தை வெளிபடுத்துகிறது. வெங்காயத்தில் மட்டுமின்றி எல்லா பிரச்னைகளிலும் முதல் வர் ஷீலா தீட்சித் இந்த போக்கைதான் கடைபிடிக்கிறார். விலை உயர்வு, மின் கட்டணம், குடிநீர் பற்றாகுறை, அங்கீகாரமற்ற குடியிருப்புகளில் வளர்ச்சியின்மை, பெண்களுக்கு பாதுகாப்பின்மை உட்பட எல்லா பிரச்னைகளிலும் தனது கையாலாகாத தனத்தைதான் முதல்வர் வெளிபடுத்தி வருகிறார். வெங்காய விலை உயர்வால் மக்கள் அதிருப்தியடைந்துள்ளதை தடுக்க கிலோ 50க்கு வெங்காய விற்பனை என்று அரசு அறிவித்துள்ளது.

ஆனால், அங்கு அழுகிய வெங்காயங்கள்தான் விற்கப்படுகின்றன. இதை சமையலுக்கு பயன்படுத்த முடியாது. அதனால்தான் பா.ஜ, சார்பில் வெங்காயம் கிலோ ஸி25க்கு விற்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.விலைவாசியை கட்டுப்படுத்துவது அரசின் கடமை. ஆனால் இன்று எல்லா பொருட்களின் விலையும் விண்ணை முட்டும் அளவுக்கு உயர்ந்துள்ளது. வெங்காய உற்பத்தி சற்று குறைந்துள்ளது. ஆனால், இதை முன் கூட்டியே அரசு அறிந்து, சூழ்நிலையை தங்களுக்கு சாதகமாக பதுக்கல் பேர்வழிகள் பயன்படுத்தி கொள்ள விடாமல் தடுத்திருக்க வேண்டும்.டெல்லியில் உள்ள மொத்த கொள்முதல் மார்கெட்களை அரசுதான் நிர்வகிக்கிறது. மத்திய மற்றும் மாநில காங்கிரஸ் அரசுகளின் திறமையின்மையால் ஏழை மற்றும் நடுத்தர மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர்.இவ்வாறு விஜய் கோயல் கூறினார்.

**பயிர் காப்பீட்டு திட்டத்தை அமல்படுத்தும் புதிய ஒப்பந்தம்**



தனியார் துறையில் உள்ள ரிலையன்ஸ் ஜெனரல் நிறுவனம்  மத்திய அரசின் பயிர் காப்பீட்டு திட்டத்தை நாட்டில் உள்ள 21 மாநிலங்களில் அமல்படுத்தும் புதிய ஒப்பந்தத்தை பெற்றுள்ளதாக கூறியுள்ளது. பருவநிலை மாற்றத்தால் இழப்பை சந்திக்கும் விவசாயிகளுக்கு உரிய நிவாரணம் வழங்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது. இதற்காக பருவநிலை சார்ந்த பயிர் காப்பீட்டு திட்டத்தை செயல்படுத்த மத்திய அரசு தீவிரம் காட்டி வருவது குறிப்பிடத்தக்கது.

**பலத்த மழையால் வயல்களில் தண்ணீர் தேங்கியது**

காட்டுமன்னார்கோவில், : காட்டுமன்னார்கோவில் பகுதியில் கடந்த 10 தினங்களாக மாலை நேரத்தில் மழை பெய்து வந்தது. தினந்தோறும் வானம் மேகமூட்டத்துடனே காணப்பட்டது.

இந்நிலையில் நேற்று முன்தினம் பலத்த மழை பெய்ததால் கிராமங்களில் உள்ள நீர் நிலைகளில், நிலப்பரப்புகளில் தண்ணீர் தேங்கியது. குறுங்குடி, கண்டமங்கலம் ஆகிய பகுதிகளில் ஒவ்வொரு ஆண்டும் விவசாயிகள் நேரடி நெல் விதைப்பு பணியில் மேட்டூர் அணை திறந்தவுடன் ஈடுபடுவர். இதே போன்று இந்த ஆண்டும். இந்த பகுதிகளில் நேரடி நெல் விதைப்பு பணியில் ஈடுபட்டனர்.

இந்நிலையில், பெய்த திடீர் மழையால் நேரடி நெல் விதைப்பு செய்யப்பட்ட வயல்களில் தண்ணீர் தேங்கியுள்ளது. இந்த தண்ணீர் இன்னும் இரண்டு தினங்கள் தேங்கி இருந்தால், நெல் விதைப்பு செய்யப்பட்ட வயல்களில் நெற்பயிர்களுக்கு பாதிப்பு ஏற்படும் என கூறப்படுகிறது.

**தொடர் மழையின் காரணமாக உளுந்தூர்பேட்டை வார சந்தையில் வெங்காயம் ரூ50க்கு விற்பனை**

தொடர் மழையின் காரணமாக உளுந்தூர்பேட்டை வாரசந்தையில் ஒரு கிலோ வெங்காயம் ரூ. 50க்கு விற்பனை செய்யப்படுவதால் பொது மக்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

விழுப்புரம் மாவட்டம் உளுந்தூர்பேட்டையில் வாரந்தோறும் புதன்கிழமைகளில் காய்கறி வாரசந்தை நடைபெற்று வருகிறது. இதில் விழுப்புரம் மாவட்டம் மட்டுமின்றி தமிழகத்தின் பல்வேறு பகுதியில் இருந்து வரும் காய்கறிகள் மற்றும் உளுந்தூர்பேட்டை மற்றும் சுற்றியுள்ள கிராமங்களில் இருந்து கொண்டுவரப்படும் காய்கறிகள் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. நேற்று காய்கறி வாரசந்தைக்கு சென்றவர்கள் வெங்காயம் உள்ளிட்ட காய்கறிகளின் விலை ஏற்றத்தால் கடும் அதிர்ச்சி அடைந்தனர். ஒரு கிலோ பெரிய வெங்காயத்தின் விலை கடந்த காலங்களில் ரூ 20க்கும் அதன் பிறகு ரூ 25க்கும் விற்பனை செய்யப்பட்டு வந்தது. நேற்று சந்தையில் ஒரு கிலோ வெங்காயம் ரூ 50க்கு விற்பனையானது. வெளிமார்க்கெட்டில் ஒரு கிலோ வெங்காயம் ரூ 70 வரையில் விற்பனையாகிறது. இது குறித்து வியாபாரிகளிடம் கேட்டால் தற்போது மழை பெய்து வருவதால் வெங்காயம் வரத்து குறைவாக இருந்து வருகிறது. ஏற்கனவே அறுவடை செய்யப்பட்ட வெங்காயம் வெளி மாநிலங்களுக்கு அதிகளவு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. தற்போது திடீரென தொடர்ந்து மழை பெய்து வருவதால் தமிழகத்தில் வெங்காயம் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக தெரிவித்தனர். இதே போல் பச்சைமிளகாய் ஒரு கிலோ ரூ 140 வரையில் விற்பனையானது. இதே நேரத்தில் வெண்டைக்காய், புடலங்காய், பீன்ஸ் உள்ளிட்ட மழையினால் தாக்குபிடிக்காமல் விரைந்து அழுகக்கூடிய காய்கறிகள் விலை வீழ்ச்சி அடைந்ததால் இதனை பயிரிட்ட விவசாயிகள் கடுமையாக நஷ்டம் அடைந்துள்ளனர்.

**காய்கறி தொகுப்பு அபிவிருத்தி திட்ட ஆலோசனை கூட்டம்**

விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் சம்பத் தலைமையில் பெருநகர காய்கறி தொகுப்புகள் அபிவிருத்தி திட்ட ஆலோசனை கூட்டம் திண்டிவனத்தில் நடந்தது.

வேளாண்மை உற்பத்தி ஆணையர் சந்தீப்சக்சேனாபங்கேற்று பேசியதாவது, பெருநகர காய்கறி தொகுப்புகள் அபிவிருத்தி திட்டத்தின் மூலம் தரமான காய்கறிகளை உற்பத்தி செய்தல், இடைத்தரகர்கள் இன்றி நேரடி கொள்முதல், காய்கறி சேகரிப்பு மையம் அமைத்தல் போன்ற பல்வேறு சலுகைகள் மூலம் விவசாயிகள் பயனடையலாம்.

சென்னை நகருக்கு தற்போது விழுப்புரம், திருவண்ணாமலை, திருவள்ளுவர், காஞ்சிபுரம், தர்மபுரி என ஐந்து மாவட்டங்களிலிருந்து காய்கறி வரு கிறது. இதனை மூன்று மடங்காக உயர்த்துவதே அரசின் திட்டமாகும். அதற்காக அந்தந்த பகுதியில் விவசாயிகள் குழு அமைத்து குளிர் கிடங்கில் சேகரித்து மொத்தமாகவோ அல்லது சிறிய அளவில் சேர்த்து அதற்கு ஏற்ப வாகனங்கள் மூலம் விவசாயிகள் நேரடியாக சென்னையில் விற்பனை செய்வதே திட்டத்தின் நோக்கமாகும்.

அதற்கு வங்கிகள் மூலம் வாகனம் வாங்க 40 சதவீதம் அரசு மானியம் வழங்க இருக்கிறது. விலை களை எஸ்எம்எஸ் மூலம் உடனுக்கு உடன் தெரிந்து கொள்ளலாம். முதற் கட்டமாக இத்திட்டம் தற்காலிகமாக ஒலக்கூர், மரக்காணம், மயிலம், கோலியனூர், கள்ளக்குறிச்சி, சங்கராபுரம் வட்டாரங்களில் செயல்படுத்தப்பட உள்ளன. என்றார்.

கூட்டத்தில் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர் துறை ஆணையர் சத்யபிரதா சாகு, வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை ஆணையர் சுனில் மேஷ்ராம், மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் சக்கரவர்த்தி, வணிக துணை இயக்குநர் சண்முகம் உள்ளிட்ட அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

**தர்மபுரி மாவட்டத்தில் விளைச்சல் அதிகரிப்பு தக்காளி விலை வீழ்ச்சி**

தர்மபுரி மாவட்டத்தில் தக்காளி விளைச்சல் அதிகரிப்பால் தொடர்ந்து தக்காளி விலை வீழ்ச்சியடைந்து வருகிறது.

தர்மபுரி மாவட்டம் பாலக்கோடு தக்காளி மார்க்கெட்டிற்கு வெள்ளிச்சந்தை, பாலக்கோடு, பென்னாகரம், மாரண்டஅள்ளி, இண்டூர் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து தக்காளி கொண்டு செல்லப்படுகிறது. இங்கிருந்து தென்மாவட்டங்களுக்கு லாரிகளில் விற்பனைக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. கடந்த மாதம் தக்காளி கிலோ ரூ35க்கு விற்பனையானது. தற்போது தக்காளி விளைச்சல் அதிகரிப்பால் கடந்த சில நாட்களாக தொடர்ந்து விலை இறங்குமுகமாக உள்ளது. நேற்று பாலக்கோடு தக்காளி மார்க்கெட்டில் ஒரு கிலோ தக்காளி ரூ8க்கு விற்பனையானது. 180 கிலோ கொண்ட ஒரு கிரேடு தக்காளி ரூ130க்கு விற்பனையாகிறது. தொடர்ந்து தக்காளி விலை வீழ்ச்சியடைந்துள்ளதால் வாங்குவதற்கு ஆளின்றி மார்க்கெட்டுகளில் தக்காளி கூடை கூடையாக குவிந்து காணப்படுகிறது. விலை குறைவு காரணமாக விவசாயிகள் பலரும் தக்காளி பறிப்பதை நிறுத்திவிட்டனர்.
பறிக்கும் கூலி மற்றும் சந்தைக்கு கொண்டு செல்வதற்கான வாகன செலவுக்கு கூட விலை கிடைக்காததால் பலரும் கால்நடைகளுக்கு உணவாக்கும் நிலை உள்ளது.

**நாமக்கல் மாவட்டத்தில் வெல்லம் விலை உயர்வு கரும்பு விவசாயிகள் மகிழ்ச்சி**

நாமக்கல் மாவட்டம் பிலிக்கல்பாளையம் சந்தையில் வெல்லம் விலை உயர்வால் கரும்பு விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.
நாமக்கல் மாவட்டம் பரமத்திவேலூர் தாலுகா சோழசிராமணி, மாரப்பம்பாளையம், சிறு நல்லிக்கோவில், ஜேடர்பாளையம், அரசம்பாளையம், ஆனங்கூர், கபிலர்மலை, பிலிக்கல்பாளையம், அண்ணா நகர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் ஆயிரக்கணக்கான ஏக்கரில் விவசாயிகள் கரும்பு பயிரிட்டுள்ளனர். இங்கு விளையும் கரும்பை கபிலர்மலை, ஜேடர்பாளையம், அண்ணா நகர் உள்ளிட்ட

சுற்றுப்பகுதிகளில் இயங்கி வரும் வெல்லம் தயாரிக்கும் ஆலை உரிமையாளர்கள் டன் கணக்கில் வாங்கிச் செல்கின்றனர். பின்னர் அவற்றை அச்சு வெல்லம், உருண்டை வெல்லமாக தயாரித்து 30 கிலோ எடை கொண்ட சிப்பங்களாக தயாரித்து பிலிக்கல்பாளையத்தில் உள்ள வெல்ல மார்க்கெட்டிற்கு கொண்டு வந்து ஏலம் விடப்படுகிறது.

வெல்லத்தை ஏலம் எடுப்பதற்காக தமிழகம் மற்றும் பல்வேறு வெளி மாநில பகுதிகளில் இருந்து மிட்டாய், இனிப்பு தயாரிப்பாளர்கள் வருகின்றனர். கடந்த வாரம் பிலிக்கல்பாளையம் வெல்ல சந்தையில் நடைபெற்ற ஏலத்தில் 30 கிலோ கொண்ட உருண்டை வெல்லம் சிப்பம் ஒன்று ரூ1170க்கும், அச்சு வெல்லம் ரூ1250க்கும் ஏலம் போனது. இந்த வாரம் நடந்த ஏலத்தில் உருண்டை வெல்லம் சிப்பம் ஒன்று ரூ1250க்கும், அச்சு வெல்லம் ரூ1350க்கும் ஏலம் போனது. ஒரு டன் கரும்பு ரூ2650 வரை விற்கப்படுகிறது. கடந்த வாரத்தை விட வெல்லம் சிப்பம் ஒன்றுக்கு ரூ80 முதல் ரூ100 வரை விலை உயர்ந்துள்ளது. இதனால் கரும்பு விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**ஆனைமலை பகுதியில் குறுவை நெல் சாகுபடி தீவிரம்**

பொள்ளாச்சியை அடுத்த ஆனை மலை வட்டாரத்தில், 2013-2014ம் ஆண்டில் 2700 எக்டேரில் குறுவைநெல் சாகுபடி செய்ய நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்று, மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் தெரிவித்தார்.

பொள்ளாச்சியை அடுத்த ஆனைமலை சுற்றுவட்டார பகுதியில் நெல் சாகுபடியே அதிகமாக உள்ளது. தற்போது ஆழியார் அணையிலிருந்து தண்ணீர் திறக்கப்பட்டுள்ளதால், பழைய ஆயக்கட்டு பாசன பகுதிகளில் குறுவை நெல் சாகுபடி மேற்கொள்ளப்ப ட்டு வருகின்றன.

விவசாயிகள் மேற்கொண்டு வரும் குறுவைசெல் சாகுப டியை மாவட்ட வேளா ண்மை இணை இயக்குனர் லட்சுமிராஜ், துணை இயக்குனர் முகமது இக்பால்,

ஆனை மலை வேளாண்மை உதவி இயக்குனர் (பொறுப்பு) சிவக்குமார் உள்ளிட்டோர் நேற்று முன்தினம் ஆய்வு மேற்கொண்டனர்.

இதையடுத்து மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் லட்சுமிராஜ் கூறுகையில், “ஆனைமலை வட்டாரத்தில் பழைய ஆயக்கட்டு பகுதிகளான அரியாபுரம், வடக்கலூர், வெப்பரை உள்ளிட்ட பகுதிகளில் வேளாண்மை துறை மூலம் 2013-2014ம் ஆண்டில் மொத்தம் 2700 எக்டேரில் குறுவைசெல் சாகுபடிக்கு திட்டம் தீட்டப்பட்டுள்ளது.

ஆழியார் அணையிலிருந்து பழைய ஆயக்கட்டு பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்பட்டுள்ளதால், குறுவை செல் சாகுபடி சீரிய முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. அதுபோல் திருந்திய நெல் சாகுபடி திட்டத்தில் மொத்தம் 950 எக்டேரில் நெல் சாகுபடி மேற்கொள்ளப்படுகிறது“ என்றார்.

**மார்க்கெட்டுக்கு வரத்து அதிகம் வாழைத்தார் விலை சரிவு**

பொள்ளாச்சி மார்க்கெட் டுக்கு நேற்று வாழைத்தார் வரத்து அதிகமாக இருந்தது. இதனால் குறைவான விலைக்கு ஏலம் போனதாக வியாபாரிகள் தெரிவித்தனார்.

பொள்ளாச்சி காந்தி வாரசந்தைக்கு, வாரத்தில் ஞாயிறு மற்றும் புதன்கிழமைகளில் வாழைத்தார் ஏலம் நடைபெறுகிறது. ஆனைமலை, கிணத்துக்கடவு, நெகமம், உடுமலை, கணியூர் மற்றும் தூத்துக்குடியில் இருந்து வாழைத்தார்கள் விற்பனைக்காக கொண்டு வரப்படுகின்றன.

செவ்வாழை, கர்ப்பூரவள்ளி, ரஷ்த்தாளி, பூவந்தார், நேந்திரன் உள்ளிட்ட வாழைத்தார்கள் ஏலம் விடப்படுகிறது. ஏலத்தில் வாழைத்தாரை வாங்க உள்ளூர் வியாபாரிகள் மட்டுமின்றி, வால்பாறை மற்றும் கேரளா வியாபாரிகள் வாங்கி செல்கின்றனர்.

தாலுகாவிற்குட்பட்ட சுற்றுவட்டார கிராமங்களில் கடந்த இரண்டு மாதங்களுக்கும் மேலாக பருவமழை பொழிந்ததால், வாழைகள் நல்ல வளர்ச்சியடைந்து குலை தள்ளியுள்ளது.

இதில் நன்கு விளைந்த வாழைத்தாரை விவசாயிகள் அறுவடை செய்து நேற்று மார்க்கெட்டுக்கு விற்பனைக்காக கொண்டுவந்தனர். நேற்று வழக்கத்தைவிட வாழைத்தார் வரத்து அதிகமாக இருந்தது. சுமார் 1000 முதல் 1200 வரையிலான வாழைத்தார்கள் ஏலத்துக்கு வரபெற்றது.

இதில் நேற்று நடந்த ஏலத்தின்போது செவ்வாழை தார் ஒன்று ரூ.300 முதல் 550 வரையிலும், கர்ப்பூரவள்ளி ரூ.250 முதல் ரூ.380 வரையிலும், பூவந்தார் ரூ.220 முதல் 340 வரை யிலும், கேரள ரஷ்த்தாளி ரூ.350க்கும் ஏலம் போனது.

கடந்த வாரத்தைவிட இந்தவாரம் வாழைத்தார் ஒன்று க்கு ரூ.200வரை குறை ந்துள்ளது. வாழைத்தாரை வாங்க கேரளா வியாபாரிகள் அதிகம் வந்திருந்தனர்.

**அமராவதி அணையில் தண்ணீர் திறப்பு நிறுத்தம்**

அமராவதி பிரதான கால்வாயில் கடந்த 15 நாட்களாக திறக்கப்பட்ட தண்ணீர், இன்றுடன் நிறுத்தப்பட்டது.

உடுமலை அருகே உள்ள அமராவதி அணை மூலம் திருப்பூர், கரூர் மாவட்டங்களில் 54 ஆயிரம் ஏக்கர் நிலம் பாசனம் பெறுகிறது. பழைய ஆயக்கட்டு பகுதிக்கு ஆற்று வழியாகவும், புதிய ஆயக்கட்டு பகுதிகளுக்கு பிரதான கால்வாய் வழியாகவும் தண்ணீர் திறக்கப்படுகிறது.

பிரதான கால்வாயில் கடந்த மாதம் திறக்கப்பட்ட தண்ணீர் பாசனத்துக்கு போதுமானதாக இல்லை என்பதால், மேலும் 15 நாட்களுக்கு தண்ணீர் திறக்க வேண்டும் என அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை கரும்பு பயிரிடுவோர் சங்கம் சார்பில் அரசுக்கு கோரிக்கை விடுக்கப்பட்டது. இதை ஏற்று கடந்த 1ம் தேதி

தண்ணீர் திறக்கப்பட்டது. இதன்மூலம் 25,750 ஏக்கரில் கரும்பு, தென்னைகள் பாசனம் பெற்றன.

இதுவரை 6600 கனஅடி நீர் திறக்கப்பட்ட நிலையில், நேற்று காலை 7 மணிக்கு தண்ணீர் நிறுத்தப்பட்டது. 90 அடி உயரம் கொண்ட அமராவதி அணையில், நேற்று காலை நீர்மட்டம் 81.12 அடியாக இருந்தது. கல்லாபுரம், ராமகுளம் வாய்க்கால்களில் 50 கனஅடி நீர் வெளியேற்றப்படுகிறது.

**ஓராண்டுக்கு பிறகு சாகுபடி பணி துவக்கம் கீழ்பவானியில் 23ம்தேதி தண்ணீர் திறப்பு விவசாயிகள் மகிழ்ச்சி**

கீழ்பவானி வாய்க்காலில் இருந்து 23ம் தேதி முதல் தண்ணீர் திறந்து விட தமிழக அரசு உத்தரவிட்டுள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். ஓராண்டுக்கு பிறகு பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்படுவதால் சாகுபடி பணிகளில் விவசாயிகள் தீவிரம் காட்டத்துவங்கியுள்ளனர்.

பவானிசாகர் அணையில் இருந்து ஆண்டுதோறும் ஆகஸ்ட் 15ம் தேதி முதல் டிசம்பர் இறுதி வரையிலும் நன்செய் பாசனத்துக்குட்பட்ட 1 லட்சத்து 3500 ஏக்கர் நிலங்களுக்கு கீழ்பவானி பாசன வாய்க்காலில் தண்ணீர் திறக்கப்படுகிறது. கடந்த ஆண்டு ஏற்பட்ட கடுமையான வறட்சியால் நன்செய் பாசனத்துக்கு வெறும் 15 நாட்கள் மட்டுமே உயிர் தண்ணீர் திறக்கப்பட்டது. இதன் காரணமாக சம்பா சாகுபடி கடந்த ஆண்டு முற்றிலும் கைவிட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இதனால் நன்செய் பாசனத்துக்கு தண்ணீர் கிடைக்காததால் ஏறத்தாழ 80 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் தரிசாக விட வேண்டிய நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டனர்.

இந்நிலையில் இந்த ஆண்டு பவானிசாகர் அணையின் நீர்பிடிப்பு பகுதிகளான நீலகிரி மாவட்டத்திலும், கேரளாவிலும் தென்மேற்கு பருவமழை நன்கு பெய்ததால் பவானி ஆற்றில் நீர்வரத்து அதிகரித்தது. இதன் காரணமாக பவானிசாகர்

அணையின் நீர்மட்டம் 85 அடியை எட்டியது. இருந்தபோதிலும் கீழ்பவானி வாய்க்காலில் நன்செய் பாசனத்துக்காக கடந்த 15ம் தேதி தண்ணீர் திறக்கப்படவில்லை. இதனால் விவசாயிகள் ஏமாற்றமடைந்த நிலையில் வரும் 23ம் தேதி முதல் தண்ணீர் திறந்து விட தமிழக முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார்.

தண்ணீர் திறப்பு குறித்து பொதுப்பணித்துறையினர் கூறியதாவது: பவானிசாகர் அணையில் இருந்து கீழ்பவானி வாய்க்காலில் தண்ணீர் திறந்து விட பரிந்துரையை ஏற்று கீழ்பவானி மெயின் வாய்க்காலில் முதலாம் மண்டலத்துக்கும், சென்னசமுத்திரம் இரட்டைமடை மதகு பாசனத்துக்குட்பட்ட கிளை வாய்க்காலில் இரண்டாம் மண்டலத்துக்கும் வரும் 23ம் தேதி முதல் தண்ணீர் திறந்து விட தமிழக முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார். துவக்கத்தில் 500 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டு படிப்படியாக நீர் திறப்பு அதிகரிக்கப்பட்டு அதிகபட்சமாக 2 ஆயிரம் கனஅடி வீதம் வாய்க்காலில் தண்ணீர் திறக்கப்படும். இதன் மூலம் மொத்தம் 1 லட்சத்து 3500 ஏக்கர் பாசன நிலங்கள் பயனடையும். இவ்வாறு பொதுப்பணித்துறையினர் தெரிவித்துள்ளனர்.

கிட்டத்தட்ட ஓராண்டு இடைவெளிக்கு பிறகு நன்செய் பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்படுவதால் சோர்வுற்று இருந்த விவசாயிகள் விவசாயப்பணிகளில் தீவிரம் காட்டத்துவங்கியுள்ளனர். அதிகமாக நெல், மஞ்சள் பயிர் சாகுபடி செய்ய விவசாயிகள் திட்டமிட்டுள்ளனர்.

டமிட்டா பழ சீசன் துவங்கியது

நீலகிரி மாவட்டத்தில் பல்வேறு வகையிலான பழ வகைகள் பயிரிடப்பட்டு தமிழகம் மட்டுமல்லாமல் வெளிமாநிலங்களுக்கும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இதில் சுண்டக்காய் வகையை சேர்ந்த டமிட்டா பழம் அதிகளவில் உற்பத்தி செய்யப்படுகிறது.

கிராமப்புற விவசாயிகள் பெரும்பாலோ னோர் விளை நிலங்கள் மற்றும் வீட்டு தோட்டங்களில் இதனை பயிரிட்டு வருகின்றனர். இப்பழம் மரத்தக்காளி எனவும் அழைக்கப்படும். தற்போது இதன் சீசன் துவங்கி உள்ளதால் பழங்கள் அதிகளவில் பழுத்துள்ளன. சலோனம் கங்சன்ஜியா என்ற அறிவியல் பெயர் கொண்ட இப்பழம் உடம்பிற்கு மிகவும் குளிர்ச்சியானது. வீடுகளில் தக்காளிக்கு பதிலாக ஒரு சிலர் சமையலுக்கு இதனை பயன்படுத்துவர்.

மேலும் பழரசமாகவும் குடிக்கலாம். இந்தியாவை தாயமாக கொண்ட இப்பழத்தில் வைட்டமின் சத்துக்கள் அதிகளவில் உள்ளது.

கொத்து கொத்தாய் காய்க்கும் தன்மை கொண்ட இப்பழ மரச்செடியை வெட்டி மீண்டும் நடவு செய்யலாம்.

ஒரு கிலோ டமிட்டா பழம் ரூ.60க்கு விற்பனை செய்யப்படுகிறது. தக்காளியின் விலை அதிகரிக்கும் போது குறைந்தளவு துவர்ப்பு உள்ள டமிட்டா பழத்தை பெரும்பாலான மக்கள் சமைய லுக்கு பயன்படுத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

## கோழிப்பண்ணை அமைக்க 50 சதவீத மானியத்தில் கடன் விண்ணப்பிக்க அழைப்பு

கோழிப்பண்ணை அமைக்க 50சதவீத மானியத்தில் கடன் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகம் முழுவதும் கோழி வளர்ப்பினை ஊக்கப்படுத்துவதற்காக பண்ணை அமைக்க மானியக் கடன் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

கரூர் மாவட்டத்தில் 240அலகுகள் நாட்டு கோழி பண்ணைகள் அமைக்க ரூ.70.20லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. விருப்பமுள்ளவர்கள் விண்ணப்பம் அளிக்கலாம். கோழிப்பண்ணை வளர்ப்பில் முன்னோடியாக விளங்கும் நாமக்கல், ஈரோடு, திருப்பூர் கோவை மாவட்டங்களைப்போல, பிற மாவட்டங்களிலும் கோழி

வளர்ப்பினை ஊக்குவிக்கும்பொருட்டு, தமிழக அரசால் 2012-13ம் ஆண்டு இத்திட்டம் முதல்முறையாக செயல்படுத்தப்பட்டது. கரூர் மாவட்டத்தில் இத்திட்டம் 35 நபர்களுக்கு ரூ.10.25லட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டது. தமிழகத்தில் இந்த திட்டம் ரூ.25கோடி மதிப்பீட்டில் நடப் பாண்டில் செயல்படுத்தப்பட உள்ளது என அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த திட்டத்தின்கீழ் கறிக்கோழி மற்றும் நாட்டுக்கோழி வளர்ப்பிற்கு தமிழக அரசு சார்பில் 25சதவீதம் மானியம், நபார்டு வங்கி மூலம் கோழிக்கான முதலீட்டு நிதியில்இருந்து 25சதவீத மானியம் மொத்தம் 50சதவீதம் மானியம் வழங்கப்பட உள்ளது. மீதம் உள்ள 50 சதவீதத்தை பயனாளிகள் தங்கள் சொந்த செலவிலோ அல்லது வங்கியிலிருந்து கடனாகவோ பெற்றுக்கொள்ளலாம்.

நபார்டு வங்கியின் 25 சதவீத மானியத்தை பெறுவதற்கு பயனாளிகள் வங்கியில் இருந்து கடன்பெற்றிருக்க வேண்டும். மேலும் நாட்டுக்கோழி வளர்ப்பினை வருடம் முழுவதும் ஊக்குவிக்கும் பொருட்டு, 2ம்தொகுப்பு கோழிக்குஞ்சுகள் வாங்கும் செலவில் 50சதவீத மானியமும் (ரூ.3125), 3ம்தொகுப்பு கோழிக்குஞ்சுகள் வாங்கும் செலவில் 30சதவீத மானியமும் (ரூ.1875), தமிழக அரசால் வழங்கப்பட உள்ளது.

மேலும் இத்திட்டத்தின்கீழ் விவசாயிகள், தனிநபர், தொழில்முனைவோர், சுயஉதவிக்குழுக்கள் ஆகியோர் தேர்வு செய்யப்பட தகுதியானவர்கள். இவர்களிடம் கோழிப்பண்ணை அமைக்க போதிய நிலம் தங்களது பெயரிலோ அல்லது குடும்ப உறுப்பினர் பெயரிலோ இருத்தல் வேண்டும். கோழிவளர்ப்பில் முன்அனுபவம் உள்ளவர்களும், ஏற்கனவே கொட்டகை அமைத்த பயனாளிகள் புதிய கொட்டகை அமைத்து பண்ணையை விரிவாக்கம் செய்ய ஆர்வமுள்ளவர்களும் இத்திட்டத்தின் மூலம் பயன்பெறலாம்.

தேர்வு செய்யப்படும் பயனாளிகளுக்கு தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக பயிற்சி மையத்தின் மூலம் 5 நாட்களுக்கு கோழி வளர்ப்பு முறை

குறித்து பயிற்சி அளிக்கப்படும். கரூர் மாவட்டத்தில் கலெக்டர் ஒப்புதலுடன் கறிக்கோழி வளர்ப்பிற்கும், பயனாளிகள் தேர்வு செய்யப்பட உள்ளதாக கூறினர்.

தகுதியும் அனுபவமும் உள்ளவர்கள் அந்தந்த பகுதிகளில் உள்ள வங்கிகளில் கடன் வழங்குவதற்கான ஒப்புதல் கடிதம் வங்கி மேலாளரிடம் இருந்துபெற்று, அப்பகுதி கால்நடை மருந்தக கால்நடை உதவி மருத்துவரிடம் சமர்ப்பித்து பயன்பெறலாம். முதலில் வருபவர்களுக்கு முன்னுரிமை என்ற அடிப்படையில் பயனாளிகள் தேர்வு செய்யப்பட உள்ளதால் பயனடைய விரும்பும் பயனாளிகள் விரைவில் தங்கள் விண்ணப்பங்களை சமர்ப்பிக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**அரியலூர் மாவட்டத்திற்கு ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் ரூ.32 லட்சம் நிதி ஒதுக்கீடு**

ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் அரியலூர் மாவட்டத்திற்கு ரூ.32 லட்சம் நிதி பெறப்பட்டுள்ளதாக கலெக்டர் சரவணவேல்ராஜ் கூறினார்.

அரியலூரில் மாவட்ட விவசாயிகள் குறை தீர் கூட்டம் கலெக்டர் அலுவலகத்தில் நடந்தது. தலைமை வகித்து கலெக்டர் சரவணவேல்ராஜ் பேசியதாவது:

தோட்டக்கலைத்துறையின் மூலம் ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் மாவட்டத்திற்கு ரூ.32 லட்சம் ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது.

இதில் பொதுப்பிரிவினருக்கு ரூ.25,60,000, தாழ்த்தப்பட்டோருக்கு ரூ.6,40,000த்தில் வீரிய ரக காய்கறி விதைகள், பழ மரச்செடிகள் வழங்கப்பட உள்ளது.

இத்திட்டத்தில், ஒரு விவசாயிக்கு அதிகப்படியாக காய்கறி விதைகள் அரை எக்டேருக்கும், பழ மரச்செடிகள் ஒரு எக்டேர் வரையிலும், 50 சதவீத மான்யத்தில்

வழங்கப்படுகின்றன. இதற்காக மிளகாய், தக்காளி விதைகள் அனைத்து வட்டாரங்களிலும் இருப்பு வைக்கப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன.

துல்லிய பண்ணை திட்டத்தின் கீழ், காய்கறிகள் உற்பத்தி பரப்பினை அதிகரிக்கும் பொருட்டு மாவட்டத்தில் 50 எக்டேர் இலக்கீடு பெறப்பட்டுள்ளது. இவற்றில் பொதுபிரிவினருக்கு 40 எக்டேர், தாழ்த்தப்பட்டோருக்கு 10 எக்டேர் வழங்கப்பட உள்ளது. இத்திட்டத்தில் விவசாயிகளுக்கு சொட்டுநீர் பாசனம் அமைத்து கொடுப்பதோடு, ஒரு எக்டேருக்கு நீரில் கரையும் உரங்கள் ரூ.15,000த்திலும், வீரிய ரக காய்கறி விதைகள் ரூ.5,000த்திலும் வழங்கப்பட்டு வருகிறது.

பந்தல் காய்கறிகளின் சாகுபடி பரப்பை அதிகரிக்கும் பொருட்டு, மாவட்டத்தில் 5 எக்டேர் இலக்கீடு பெறப்பட்டுள்ளது. இத்திட்டத்தில், எக்டேர் ஒன்றுக்கு ரூ.2 லட்சம் மதிப்பில் பந்தல் காய்கறிகள் சாகுபடி செய்ய கல்தூண் அல்லது கான்கிரீட் தூண் பயன்படுத்தி புதிதாக பந்தல் அமைத்ததற்கான பிந்தைய மான்யமே தற்போதும் வழங்கப்பட்டு வருகிறது.

தேசிய நுண்ணீர் பாசன இயக்கத்தின் கீழ், மாவட்டத்தில் விவசாயிகளுக்கு சொட்டு நீர் பாசனம் அமைத்து கொடுக்க நடப்பு (2013-14) ஆண்டிற்கு 350 எக்டேர் இலக்கீடு பெறப்பட்டுள்ளது. நடப்பு சம்பா பருவத்தில் ஆடுதுறை39, ஆடுதுறை45, கோ43, சாவித்ரி ஆகிய விதைகள் இதுவரை 135டன் விநியோகம் செய்யப்பட்டுள்ளது. நிலக்கடலை சாகுபடி செய்ய 25 டன் விதைகள் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு வழங்க 150 டன் நெல் விதைகள் இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

உரங்களை பொறுத்தவரை, யூரியா 742 மெ.டன், டிஏபி 07 மெ.டன், பொட்டாஷ் 432 மெ.டன், கலப்பு உரங்கள் 470 மெ.டன் தேவையான அளவு தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கம், தனியார் விற்பனை

மையங்களில் இருப்பு உள்ளது. மாவட்டத்தில் இதுவரை குறுவை சாகுபடி 1,722 எக்டேரில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மக்காசோளம் 2,224 எக்டேரிலும், எண்ணெய் வித்துக்கள் 2,325 எக்டேரிலும், கரும்பு 7,336 எக்டேரிலும் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. சம்பா பருவத்தில் நெல் சாகுபடி 24,000 எக்டேரிலும், மக்காச்சோளம் 13,000 எக்டேரிலும், பருத்தி 8,000 எக்டேரிலும் சாகுபடி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நெல் இயக்கத்தின் கீழ் செயல்படுத்த, இம்மாவட்டத்துக்கு ரூ.36.14 லட்சம் ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது. இத்திட்டத்தில், 280 மெ. டன் நெல் கிலோ விலை ரூ.5மானியத்தில் விநியோகிக்கவும், திருந்திய நெல் சாகுபடி தொழில் நுட்பத்தை செயல்படுத்துவதற்கு எக்டேருக்கு ரூ.3,000, நேரடி நெல் விதைப்பிற்கு உழவு மானியமாக எக்டேருக்கு ரூ.600ம், நேரடி நெல் விதைப்பு செய்யும் விவசாயிகளுக்கு களைக்கொல்லி விநியோகம் செய்ய எக்டேருக்கு ரூ.750 மானியமாகவும் வழங்கப்பட்டு வருகிறது. இவ்வாறு அவர் பேசினார்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**20.08.2013**

**செம்பட்டி பகுதயல கடும வறடசயால கருகிய தெனனை மரஙகள விவசாயிகள் கவலை**

செம்பட்டி

செம்பட்டி பகுதியில் கடும் வறட்சி காரணமாக தென்னை மரங்கள் கருகி வருவதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

<u>தென்னை விவசாயம்</u>

திண்டுககல் மாவட்டம் செம்பட்டி, ஆத்தூர், சித்தையன்கோட்டை, எஸ்.புதுககோட்டை, பச்சமலையான்கோட்டை உள்ளிட்ட பல்வேறு பகுதியில் தென்னை மரங்கள் உள்ளன. கடந்த 40 ஆண்டுகளுக்கும் மேலாக இந்த தென்னை மரங்களை விவசாயிகள் வளர்த்து வருகிறார்கள். இந்த நிலையில் கடந்த சில மாதங்களாக போதய மழை இல்லாத காரணததால பெருமபாலான வவசாய கணறுகளும, ஆழகுழாய கணறுகளும வறணடு காணப்படுகின்றன.

மேலும இப்பகுதியில் உளள கருங்குளம், நடுககுளம், புல்வெட்டி குளம் மற்றும் ஊராட்சி பகுதியில் உள்ள அனைதது குளஙகளும தண்ணீர் இல்லாமல் வறண்டு காணப்படுகிறது. இதனால் பொதுமககள் குடிநீர் கிடைககாமல் அவதிப்பட்டு வருகின்றனர்.

<u>விவசாயிகள் கவலை</u>

எஸ்.புதுக்கோட்டை, ஜெ.புதுக்கோட்டை, எஸ்.பாறைப்பட்டி, பச்சமலையான்கோட்டை, மேட்டுப்பட்டி உள்ளிட்ட பெரும்பாலான கிராம பகுதிகளில நிலத்தடி நீர் மட்டம் வெகுவாக குறைந்து விட்டது. இதனால்

தெனனை மரஙகள தண்ணீர் இல்லாமல் கருகி வருகிறது. சுமார் 35, 40 ஆணடுகளுககும மேலாக வளர்த்து வந்த இநத தென்னை மரங்கள் கருகி விட்டதால் வவசாயிகள் மிகவும் வேதனையடைந்து வருகின்றனர். இப்பகுதியில் தென்னை மரங்கள் உள்பட அனைத்து வகையான விவசாய பயிர்களும் காய்ந்து விட்டன. எனவே பாதிககப்பட்ட அனைவருக்கும் தமிழக அரசு வறட்சி நிவாரணம் வழங்க வேண்டுமென விவசாயிகள் கோரிககை விடுத்துள்ளனர்.

கோரிக்கை

செம்பட்டி பகுதியில் பெரும்பாலான வீடுகளில் குடிநீரை விலைககு வாங்கி பயன்படுத்தி வருகின்றனர். ஆடு, மாடு, கோழிகளும் தண்ணீர் இல்லாமல் தவிககிறது. இதனால் டிராகடர் மற்றும் மினி ஆட்டோக்களில் தண்ணீர் வாங்கி பயன்படுத்தி வருகின்றனர்.

**காங்கயம் வாரச்சந்தையில் வரத்து அதிகரித்ததால் முருங்கை, தக்காளி கிலோ 8 ரூபாய்க்கு விற்பனை ஒரு கிலோ பெரியவெங்காயம் 60 ரூபாய்க்கு விற்பனை ஆனது**

காங்கயம்,

காங்கயம் வாரச்சந்தையில் வரத்து அதிகரித்ததால் முருங்கைக்காய், தக்காளி கிலோ 8 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது. ஒரு கிலோ பெரிய வெங்காயம் 60 ரூபாய்க்கு விற்பனை ஆனது.

வாரச்சந்தை

திருப்பூர் மாவட்டம் காங்கயத்தில் திங்கட்கிழமை தோறும் சந்தை கூடுகிறது. காய்கறி முதல் மளிகை, ஜவுளி மற்றும் வீட்டிற்கு தேவையான அனைத்து பொருட்களும் இங்கு விற்பனை செய்யப்படுகிறது.காங்கயம் நகர மக்கள் மட்டுமல்லாமல் கிராமப்புற மக்களும் வாரந்தோறும் இங்கு வந்து வீட்டிற்கு தேவையான பொருட்களை வாங்கி செல்கின்றனர்.

வாரந்தோறும் கூலி வேலை செய்பவர்கள் திங்கட்கிழமைதான் சம்பளம் வாங்குவார்கள். சந்தை நாளில் இப்பகுதியில் உள்ள பெரும்பாலான தொழிற்சாலைகள் மற்றும் விவசாய வேலைகளுக்கு விடுமுறை விடப்படும்.

எனவே சந்தை நாளில் காங்கயம் பஸ்நிலையம் மற்றும் கடைவீதியில் மக்கள் கூட்டம் அதிகமாகவே இருக்கும்.

<u>முருங்கை, தக்காளி விலை குறைவு</u>

கடந்த சில மாதங்களாகவே சந்தையில் காய்கறிவிலை கிடுகிடுவென உயர்ந்துகொண்டே போனது. இதனால் மக்கள் பெரும் சிரமத்திற்கு ஆளானார்கள். நேற்று கூடிய வாரச்சந்தையில் சற்று ஆறுதலாக விஷயம். ஒரு சில காய்கறிகளின் விலை குறைந்து காணப்பட்டது. குறிப்பாக தக்காளிபழம், முருங்கைக்காய் வரத்து அதிகரித்தது.

கடந்த வாரம் சந்தைக்கு சுமார் 3 டன் அளவே முருங்கைக்காய் வரத்து இருந்தது..இதனால் ஒரு கிலோ ரூ.20க்கு விற்பனை செய்யப்பட்டது.ஆனால் நேற்று சுமார் 6 டன் முருங்கைக்காய் விற்பனைக்கு குவிந்தது. இதனால் ஒரு கிலோ முருங்கைக்காய் 8 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது. சீசன் தொடங்கி விட்டதால் முருங்கைக்காய் வரத்து மேலும் அதிகரித்து விலை குறையும் என வியாபாரிகள் தெரிவித்தனர்.

இதேபோல தக்காளி விலையும் அதிரடியாக சரிந்தது.கடந்த வாரம் ஒரு தக்காளி 20 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது. ஆனால் நேற்று தக்காளி கிலோ 8 ரூபாய்க்கு விற்கப்பட்டது. காங்கயம் பகுதியில் கடும் வறட்சி காரணமாக தக்காளி குறைவாகவே வந்தது. ஆனால் சத்தியமங்கலம், தாளவாடி போன்ற பகுதிகளிலிருந்து தக்காளி வரத்து சந்தைக்கு அதிகமாக வந்திருந்ததால் விலை குறைந்ததாக வியாபாரிகள் தெரிவித்தனர். முருங்கைக்காய், தக்காளி விலை குறைந்ததால் விவசாயிகள் கவலை அடைந்தனர்.

<u>பெரியவெங்காயம் விலை உயர்வு</u>

அதே நேரத்தில் பெரிய வெங்காயம்,பச்சை மிளாகாய் போன்றவை கடந்த வாரத்தை விட சற்று அதிகமான விலைக்கே விற்பனை ஆனது. வெங்காயம் ஒரு கிலோ 60 ரூபாய்க்கும், பச்சை மிளகாய் 70 ரூபாய்க்கும் விற்கப்பட்டது. இதேபோல காங்கயம் உழவர் சந்தையிலும் காய்கறி வரத்து அதிகமாக இருந்தது. நேற்று காலையில் 7 டன் காய்கறிகள் விற்பனைக்கு வந்ததாக உழவர் சந்தை அதிகாரிகள் தெரிவித்தனர்.

**2013–14–ஆம் பருவத்தில் சோயாபீன் விளைச்சல் 18 சதவீதம் அதிகரிக்கும்**

மும்பை

2013–14–ஆம் பருவத்தில் சோயாபீன் விளைச்சல் 18 சதவீதம் அதிகரித்து இது வரை இல்லாத அளவிற்கு 1.33 கோடி டன்னாக உயரும் என இத்துறையின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார். இது சென்ற பருவத்தில் 1.13 கோடி டன்னாக இருந்தது.

நாட்டின் அனைத்து பகுதிகளிலும் பருவமழை நன்றாக இருந்தது. மேலும் ஆகஸ்டு மற்றும் செப்டம்பர் மாதங்களில் பருவநிலை சாதகமாக இருக்கும் என்று முன்னறிவிப்பு செய்யப்பட்டுள்ளது. இதன் காரணமாக சோயாபீன் பயிரிடும் பரப்பளவு அதிகரித்துள்ளது.

ஆகஸ்டு 15–ந் தேதி நிலவரப்படி, நாட்டின் சோயாபீன் பயிரிடும் பரப்பளவு 1.21 கோடி ஹெக்டேராக உயர்ந்துள்ளது. இது சென்ற ஆண்டின் இதே காலத்தில் 1.07 கோடி ஹெக்டேராக இருந்தது. எனவே நடப்பு பருவத்தில் சோயாபீன் உற்பத்தி 15 முதல் 20 லட்சம் டன் வரை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நாட்டின் சோயாபீன் உற்பத்தியில் மத்திய பிரதேசம் மற்றும் மேற்கு மகாராஷ்டிரா மாநிலங்களின் பங்களிப்பு 85 சதவீதமாக உள்ளது.

அக்டோபர் 31–ந் தேதியோடு நிறைவடையும் நடப்பு சந்தை பருவத்தில் நாட்டின் சமையல் எண்ணெய் இறக்குமதி 1.10 கோடி டன்னாக அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது சென்ற பருவத்தில் 1 கோடி டன்னாக இருந்தது. சோயாபீன் விளைச்சல் அதிகரிப்பால் சோயா புண்ணாக்கு ஏற்றுமதி அதிகரிக்கும். வரும் சந்தைப்படுத்துதல் பருவத்தில் சமையல் எண்ணெய் இறக்குமதி குறையும் என நிபுணர் ஒருவர் தெரிவித்தார்.